01.08.2024
அசல் வழக்கு எண்: 65/2020

வா.சா.1 சாட்சி குணசேகரன் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடரச்சி

நான் தாவா சொத்தில் கூட்டு அனுபவத்தில் இருப்பதை காட்டுவதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். என்ன ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் பட்டா தாக்கல் செய்துள்ளேன். நான் பட்டா எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. கூட்டு அனுபவத்தில் இருப்பதாக குறிப்பிட்டு நீதிமன்ற கட்டணம் செலுத்தி இருப்பது தவறு என்றால் சரியல்ல. எனது நிரூபண வாக்குமூலத்தில் கடந்த 05.06.2020 ம் தேதி பிரதிவாதிகளை சந்தித்து கிரைய பத்திரத்தை ரத்து செய்ய கோரியபோது பிரதிவாதிகள் எங்களுடன் தகராறு செய்தனர் என்று சொல்லியுள்ள விபரத்தை எனது பிராதில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன்.

என்னிடம் காட்டப்படும் நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ. 2 வழக்கறிஞர் அறிவிப்பில் 05.06.2020 ம் தேதி பிரதிவாதிகளை சந்தித்ததாகவோ அவர்கள் எங்களுடன் தகராறு செய்ததாகவோ சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. நிரூபண வாக்குமூலத்தில் நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாக சொல்லியுள்ள விபரத்தை எனது பிராதிலோ வா.சா.ஆ. 2 வழக்கறிஞர் அறிவிப்பிலோ சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை.

என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.4 ஆவணத்தில் யார் மீது என்ன காரணத்திற்காக புகார் கொடுக்கப்பட்டது என்று சொல்லப்படவில்லை என்றால் சரிதான். நான் புகார் கொடுத்தது சம்பந்தமாக விசாரணை நடைபெற்றதா என்றால் இல்லை. எந்த பிரதிவாதி எனது சுவாதீனத்தை இடையூறு செய்தார் என்றால் 1ம் பிரதிவாதியான எனது அப்பா இடையூறு செய்தார். எந்த தேதி, மாதம் மற்றும் வருடம் இடையூறு செய்தார்கள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

தாவா சொத்து 1ம் பிரதிவாதிக்கு அவருடைய உடன் பிறந்தவர்களுடன் ஏற்பட்ட பாக பிரிவினையின் அடிப்படையில் கிடைத்தது என்றால் சரிதான். பாக பிரிவினையின் அடிப்படையில் 1ம் பிரதிவாதிக்கு கிடைத்த சொத்து அவருடைய தனிப்பட்ட சொத்து என்றால் சரிதான். 1ம் பிரதிவாதிக்கு கிடைத்த தனிப்பட்ட சொத்தை அவர் என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என்றால் சரியல்ல.

எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள 24.06.1996ம் தேதியிட்ட ஜெனரல் பவர் பத்திரம், 25.01.2006ம் தேதியிட்ட கிரைய பத்திரம் மற்றும் 27.02.2006 ம் தேதியிட்ட கிரைய பத்திரம் சம்பந்தமாக என்னிடம் காட்டப்படும் பிராதில் சொல்லப்பட்டுள்ளதா என்றால் சொல்லப்படவில்லை. மேற்படி ஆவணங்கள் சம்பந்தமாக நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பிலும் சொல்லவில்லை என்றால் சரிதான்.

என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ. 1 ஆவணத்தில் 3வது பக்கத்தில் முதல் வரியில் 1ம் பிரதிவாதி தான் தன் கைவசம் வைத்து வில்லங்க விவகாரங்களுக்கும் உட்படுத்தாமலும் சர்வ சுதந்திரபாத்திரமாக ஆண்டு

அனுபவித்து அவருகிற சொத்து என்று சொல்லியுள்ளார் என்றால் சரிதான். எனது நிரூபண வாக்குமூலத்தில் நான் குடியிருக்கும் வீடு பூர்வீக பாத்தியப்பட்ட வீடு என்று சொல்லியுள்ள விபரத்தை பிராதில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை.

என்னுடைய பிறப்பு சான்றிதழ் என்னிடம் உள்ளதா என்றால் உள்ளது. எனது சகோதரர் முத்துப்பாண்டியிடமும் பிறப்பு சான்றிதழ் உள்ளது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதிக்கு வாதிகளாகிய நாங்கள் பிறக்கவில்லை என்று 1ம் பிரதிவாதி கட்சி செய்யும்பட்சத்தில் எங்களது பிறப்பு சான்றிதழ்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியும் என்றால் தாக்கல் செய்ய முடியும்.

வா.சா.ஆ.8 பள்ளி சான்றிதழ் பள்ளியில் யார் சேர்க்கிறார்களோ அவர்கள் சொல்லும் விபரத்தை வைத்து பதிவு செய்யப்படும் விபரங்களை வைத்து கொடுக்கப்படும் ஆவணம் என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ஆதார் அடையாள அட்டையும் நாம் சொல்லும் தகவல்களை வைத்து கொடுக்கப்படும் ஆவணம் என்றால் சரிதான். நான் 1ம் பிரதிவாதிக்குதான் பிறந்தேன் என்பதற்கு எனது தாயார் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க முடியுமா என்றால் அவரால் நடக்க இயலாது. நீதிமன்றத்தில் இருந்து ஆணையரை நியமணம் செய்து எனது தாயாரை வீட்டில் வைத்து விசாரிக்கலாம் என்றால் சரிதான். வாதிகள் 1ம் பிரதிவாதிக்கு பிறக்கவில்லை என்றால் சரியல்ல. ஆதரவில்லாமல் இருந்த எனது தாயாரையும், எங்களையும் 1ம் பிரதிவாதி ஆதரவுகொடுத்ததால் தற்போது 1ம் பிரதிவாதியின் சொத்தில் பாகம் கேட்கிறோம் என்றால் சரியல்ல.

எனது தாயார் தாக்கல் செய்த மனுவை படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்க்கவில்லை. எனது தாயார் தாக்கல் செய்த மனுவிற்கு பதிலுரை தாக்கல் செய்ய நான்தான் எனது வழக்கறிஞருக்கு விபரம் சொன்னேன்

என்றாலும் மனுவை படித்து பார்த்து தெரிந்துகொண்டால்தான் பதிலுரைக்கு விபரம் சொல்ல முடியும் என்றாலும் சரிதான்.

எனக்கு எந்தவித பரிகாரமும் கிடைக்கதக்கது அல்ல என்றாலும் 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு எழுதிகொடுத்த கிரைய ஆவணம் செல்லுபடி ஆகும் என்றாலும் சரியல்ல.